பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 12 2024 **TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று பிரபல பொருளாதார நிபுணர்களுடன் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை மேற்கொண்டார்.
- தமிழகத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான பணி ஆணை வழங்குவதை தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி, மாநில அரசை, மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்துவதில், ஜார்கண்ட் மாநில அரசு அக்கறையின்றி இருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.
- ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் அமையவுள்ள தமிழ் ஆய்வு இருக்கை, தமிழர்களின் பாரம்பரியத்தை உலகறிய செய்வதில் முக்கிய பங்காற்றும் என முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- 19 வயதுக்கு உட்பட்டோருக்கான டுவென்டி – டுவென்டி மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் 15 பேர் கொண்ட பட்டியலை பிசிசிஐ அறிவித்துள்ளது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று பிரபல பொருளாதார நிபுணர்களுடன் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியில் உள்ள நித்தி ஆயோக் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், நித்தி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு B V R சுப்பிரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>

மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான பணி ஆணையை வழங்குவதை தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி, தமிழக அரசை மத்திய சுரங்க அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, சுரங்க அமைச்சகம் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில், மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்துக்கு உட்பட்ட தெற்கு தெரு, முத்துவேல்பட்டி சுற்று வட்டாரங்களில் டங்ஸ்டன் சுரங்கம்

அமைப்பதற்கான புவியியல் ஆய்வு குறிப்பை கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் 21-ஆம் தேதி இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழக அரசுக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சுரங்க சட்டத்திருத்தத்தின்படி, நாயக்கர்பட்டி சுரங்க ஏலம் தொடர்பாக 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி சுரங்க அமைச்சகத்தால் மாநில அரசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்து, கடந்த ஆண்டு அக்டோபர் 3-ஆம் தேதி மாநில நீர்வளத்துறை அமைச்சர் எழுதிய கடிதத்தில், முக்கியமான கனிமங்களை எடுப்பதற்கான சுரங்கம் அமைப்பதற்கு ஏலம் விடுவதற்கான அதிகாரம் மாநில அரசுக்கே இருப்பதாக கூறியதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் பெரிய அளவிலான கனிம சுரங்கம் எதையும் மாநில அரசு ஏலம் விடாத நிலையில், தமிழக அமைச்சரின் கடிதத்துக்கு பதிலளித்த பிறகு மத்திய அரசு, ஏல நடவடிக்கையை தொடர்வது குறித்து மாநில தலைமைச்செயலருக்கு கடிதம் அனுப்பியதாகவும் சுரங்க அமைச்சகம் கூறியுள்ளது.

இந்நிலையில், ஏலதாரர் விவரத்தை அறிவித்த பிறகு, அப்பகுதியில் உயிர் பன்மைமிக்க பாரம்பரிய தளங்கள் இருப்பதாக கூறி, ஏராளமான முறையீடுகள் வரப்பெற்றுள்ளதால், ஏலம் விடும் பகுதியை மாற்றியமைக்கும்படி இந்திய புவியியல் ஆய்வு நிறுவனத்தை கேட்டுக்கொண்டிருப்பதாகவும் சுரங்க அமைச்சகம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

அனைத்து வீடுகளுக்கும் குழாய்மூலம் குடிநீர் வழங்கும் மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்துவதில், ஜார்கண்ட் மாநில அரசு அக்கறையின்றி இருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

மூன்று நாள் பயணமாக ஜார்கண்ட் சென்றுள்ள அவர், வளர்ச்சியில் பின்தங்கிய பலாமு மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் திட்டப்பணிகள் குறித்து இன்று ஆய்வு செய்தார்.

அப்போது பேசிய அமைச்சர், பின்தங்கிய மாவட்டங்களின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு ஐந்தாண்டுகளுக்கு முன்பே ஜார்கண்ட்டிற்கு போதுமான நிதி ஒதுக்கியும், அதனை செலவிடுவதில் மாநில அரசு ஆர்வம் காட்டவில்லை என்றார்.

மேலும், நல்லாட்சி வார கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பலாமுவில் நடைபெற்ற "கிராமங்களை நோக்கி நிர்வாகம்" என்ற தலைப்பிலான பயிலரங்கிலும் மத்திய இணையமைச்சர் கலந்துகொண்டார்.

பின்னர், ஹரிஹர்கஞ்ச் பகுதியில் உள்ள Kaowakho கிராமத்தில் உள்ள ஷெட்யூல்டு வகுப்பினருக்கான உண்டு உறைவிட பள்ளியிலும் திரு எல்.முருகன் ஆய்வு செய்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தரமான கல்வி வழங்குவதன்மூலம், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த மக்களுக்கு அதிகாரமளிக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் முதல் கூட்டம் அடுத்த மாதம் 8-ஆம்தேதி நடைபெறவுள்ளது.

மக்களவை மற்றும் மாநிலங்களவையை சேர்ந்த மொத்தம் 39 உறுப்பினர்கள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

கூட்டுக்குழுவின் அறிக்கை நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் கடைசி வாரத்தின் முதல் நாளில் தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உல்ஃபா எனப்படும் அஸ்ஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி அமைப்பை சட்டவிரோத இயக்கமாக அறிவிப்பது குறித்து பரிசீலிக்க தீர்ப்பாயம் ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

இந்த தீர்ப்பாயத்தின் தலைவராக குவஹாத்தி உயர்நீதிமன்ற நீதிபதி மைக்கேல் 'Zothan khuma ' நியமிக்கப்பட்டுள்ளார்.

உல்ஃபா இயக்கம் மீது கடந்த 1990-ஆம் ஆண்டு முதல் முறையாக தடை விதிக்கப்பட்டு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது.

அண்மையில், இந்த தடையை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டித்து, மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் அமையவுள்ள தமிழ் ஆய்வு இருக்கை, தமிழர்களின் வர்த்தகம், பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை உலகறியச்செய்வதில் முக்கிய பங்காற்றும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க, தமிழக அரசு ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் வழங்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பண்பாட்டின் குன்றாத வளமையை உலகெங்கிலும் பறைசாற்றுவதிலும், எதிர்கால தலைமுறையினரை ஊக்கப்படுத்துவதற்கும் இந்த ஆய்வு இருக்கை உதவிகரமாக இருக்கும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

“இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48 திட்டம் மூலம், தமிழகத்தில் இதுவரை 3 லட்சத்து 20 ஆயிரத்து 264 பேர் மீட்கப்பட்டிருப்பதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

விபத்தில் சிக்கியவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மாநில அரசால் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகையை ஒரு லட்சம் ரூபாயிலிருந்து, இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் என 721 மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

<<<<<<>>>>>>

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகமான இஎஸ்ஐ, தனது சேவைகளை வலுப்படுத்தும் விதமாக தகவல் தொழில்நுட்ப நடைமுறைகளை மேம்படுத்தியுள்ளது.

நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல், மருத்துவமனை செயல்பாடுகளை திறம்பட நிர்வகிக்கும் விதமாக தன்வந்திரி மருத்துவ தகவல் முறை என்ற புதிய நடைமுறையை உருவாக்கியுள்ளது.

இந்த சேவையின் பயன்பாடு இஎஸ்ஐ மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான டுவென்டி – டுவென்டி மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் 15 பேர் கொண்ட பட்டியலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

இந்திய அணியின் கேப்டனாக நிக்கி பிரசாத்தும், துணை கேப்டனாக Sanika Chalke –யும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டிகள் மலேசியாவின் கோலாலம்பூரில் அடுத்த மாதம் 18–ஆம் தேதி தொடங்கி, 31–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன.

---------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இன்டீஸ் அணி வெற்றிபெற 359 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வதோதராவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 358 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Harleen Deol 115 ரன் எடுத்தார்.

இதையடுத்து, தற்போது விளையாடி வரும் வெஸ்ட் இன்டீஸ் அணி சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்பிற்கு 104 ரன் எடுத்துள்ளது.

-------

ஐ சி சி சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணையை ஐ சி சி தலைவர் திரு ஜெய்ஷா வெளியிட்டுள்ளார்.

இந்த போட்டிகள் வரும் பிப்ரவரி 19-ஆம் தேதி தொடங்கி, மார்ச் ஒன்பதாம் தேதிவரை நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி, பிப்ரவரி 20-ஆம் தேதி துபாயில் நடைபெறும் தனது முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

பிப்ரவரி 23-ஆம் தேதி நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

முதலாவது அரையிறுதி போட்டி மார்ச் 4-ஆம் தேதி துபாயிலும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மார்ச் 5-ஆம்தேதியும், இறுதிப்போட்டி மார்ச் ஒன்பதாம் தேதி லாகூரிலும் நடைபெறும்.

எனினும், இந்தியா அரையிறுதி அல்லது இறுதிப்போட்டிக்கு தகுதிபெறும்பட்சத்தில், அந்த போட்டிகள் துபாயில் நடத்தப்படும் எனவும் ஐ சி சி தெரிவித்துள்ளது.

-----------------

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர், Zeel தேசாய் உள்ளிட்ட ஒன்பது பேர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**